**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**

முன்னிலை: திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ., எல்.எல்.எம்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் நாள் திங்கட்கிழமை

இ.ம.எண்: 626/2018

in

அ. வ. எண் : 9/2013

மாரியம்மாள் . . . . மனுதாரர்/ வாதி

/எதிராக/

1.அமராவதி
2.அய்யமுத்து
3 வைத்திலிங்கம்
4.முத்தம்மாள்
5.கோகிலா
6.அங்கமுத்து(15.05.2017 ல் இறந்துவிட்டார்)
7.நாராயணசாமி
8.ஆறுமுகம்
9.ஆனந்த்
10.செந்தில்
11.சின்னையன்
12.விஸ்வநாதன்
13.வரதராஜன்
14.லட்சுமியம்மாள்(இறந்தவர்)
15.பூர்ணையன்
16.கோவிந்தராஜ்
17.தவமணி
18.பன்னீர்செல்வம்
19.பாப்பாத்தியம்மாள்
20.கமலம்
21.சரோஜா
22.தமிழரசி
23.விஜயகுமார்
24.ரஞ்சித்குமார் . . . . .எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 16.11.2018-ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் திரு.A.M.C.பெரியசாமி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5, 7 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5, 7 முதல் 12 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாகிவிட்டார்கள், 6, 14 எதிர்மனுதாரர்கள்/6, 14 பிரதிவாதிகள் இறந்துவிட்டார்கள், 13, 15, 19 முதல் 22

எதிர்மனுதாரர்கள்/ 13, 15, 19 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில் திரு.A.ராமகிருஷ்ணன் மற்றும் திரு.V.ரணதேவ், வழக்கறிஞர்கள் ஆஜராகியும், 18ம் எதிர்மனுதாரர்/18ம் பிரதிவாதி தரப்பில் திரு.P.சிதம்பரம் மற்றும் திரு.V.ரணதேவ் வழக்கறிஞர்கள் ஆஜராகியும், 23, 24 எதிர்மனுதாரர்கள் / 23, 24 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாகியும் இருந்து வந்த இம்மனுவில் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்த மேற்படி மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 சி.பி.சி-ன் கீழ் இம்மனுவின் "திருத்தப்பாட்டு விவரத்தில்" கண்டவாறு அசல் வழக்குரையை திருத்தம் செய்திட உத்தரவு செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு இதுவாகும்.

1) மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் : -

இம்மனுவில் மனுதாரர், மேற்படி அசல் தாவாவில் வாதி ஆவார். மேற்படி அசல் வழக்கினை மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி சமூகம் கோர்ட்டில் தாக்கல் செய்து அதுவும் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சமூகம் கோர்ட்டில் விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் 6ம் பிரதிவாதியான அங்கமுத்து என்பவர் கடந்த 15.05.2017ம் தேதியன்று இறந்துவிட்டார். மேற்படி இறந்துபோன அங்கமுத்துவின் வாரிசுகளை தாவாவில் சேர்க்கவேண்டி இ.ம.எண்.204/2018ல் மனு செய்து அதுவும் கடந்த 24.08.2018ம் தேதியில் சமூகம் கோர்ட்டாரவர்களால் அனுமதிக்கப்பட்டுவிட்டது. அதன்படி இவ்வழக்கின் அசல் வழக்குரையில் இந்த மனுவில் திருத்தப்பாட்டு விவரத்தில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்திட சமூகம் கோர்ட்டார் மேலான அனுமதி அளித்து இந்த திருத்தப்பாட்டு மனுவினை அனுமதித்திட இம்மனுவினை தாக்கல் செய்கிறார். ஆகையால் சமூகம் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து இந்த திருத்தப்பாட்டு மனுவின் "திருத்தப்பாட்டு விவரத்தில்" கண்டவாறு அசல் வழக்குரையை திருத்தம் செய்திட வேண்டி பணிவுடன் வேண்டிப் பிரார்த்திக்கிறார்.

2) 13ம் எதிர்மனுதாரர் / 13ம் பிரதிவாதி தாக்கல் செய்து 15, 18 முதல் 22 எதிர்மனுதாரர்கள் / 15, 18 முதல் 22 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் : -

இம்மனு பொய்யானதும், மோசடி நிறைந்ததும், சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி வழக்கு சமூகம் கோர்ட்டில் விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் 6ம் பிரதிவாதியான அங்கமுத்து என்பவர் கடந்த 15.05.2017ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், மேற்படி இறந்துபோன அங்கமுத்துவின் வாரிசுகளை மேற்படி வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க அனுமதிக்க வேண்டி இ.ம.எண்.204/2018 என்ற எண்ணில் மனுதாக்கல் செய்து மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதும் உண்மையே. மேற்படி உத்தரவின் அடிப்படையில் மேற்படி வழக்குரையை திருத்தம் செய்ய இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்பதும் உண்மையே. மேற்படி வழக்கின் இறந்துபோன 6ம் பிரதிவாதி அங்கமுத்துவின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டி இந்த மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.204/2018 மனுவில் மேற்படி அங்கமுத்துவின் வாரிசுகளான 2வது மனைவி இறந்துபோன கமலா என்பவரின் மகளான பரிமளா என்பவரையும், 3வது மனைவியான பொன்னாயி என்பவரின் மகன்களான அறிவழகன் மற்றும் இந்திரா என்பவரையும் வாரிசுகளாக சேர்க்கவில்லை. எனவே மேற்படியார்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள மனுவின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள இந்த திருத்தப்பாட்டு மனுவிலும் மேற்படியார்களை சேர்க்காததால் இந்த மனு எவ்விதத்திலும் நிலைக்கத்தக்கதல்ல. ஆகையால், சமூகம் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து இறந்துபோன 6ம் பிரதிவாதியின் வாரிசுகள் அனைவரையும் மேற்படி மனுவில் உரிய தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் மேற்படி மனுவினை மிகுந்த செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வணக்கமாய் வேண்டி பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) <u>பிரச்சனை :-</u>

மனுவில் "திருத்தப்பாட்டு விவரத்தில்" கண்டவாறு அசல் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டுமா? என்பதே நாம் முடிவு செய்ய வேண்டிய பிரச்சினையாகும்.

5) அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்கு பட்டியலில் போடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்த சூழ்நிலையில் 15.05.2017 ல் 6 ம் பிரதிவாதி அங்கமுத்து என்பவர் இறந்துவிட்டதாக 09.03.2018 ல் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, அதனடிப்படையில் மேற்படி 6 ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் 23, 24 பிரதிவாதிகளாக சேர்ப்பதற்காக மனுதாரர்/வாதி தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இ.ம.எண்.204/2018 தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவானது 24.08.2018 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேற்படி மனுவின் தொடர்ச்சியாக 6 ம் பிரதிவாதியின் வாரிசுகளான 23, 24 பிரதிவாதிகள் சம்பந்தமாக அசல் வழக்கில் திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர்/வாதி தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. எனவே இந்த மனுவானது Consequential one என்பதால் இ.ம.எண்.204/2018 ன் தொடர்ச்சியாக இந்த திருத்தப்பாடு மனுவை அனுமதிக்க வேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் காண்கிறது. ஆனால் மேற்படி 6 ம் பிரதிவாதி அங்கமுத்துவின் 2 வது மனைவியின் வாரிசு பரிமளா என்பவரையும், 3 வது மனைவியின் வாரிசுகளான அறிவழகன், இந்திரா என்பவர்களையும் வாரிசுகளாக சேர்க்கவில்லை என கூறி, 13 ம் எதிர்மனுதாரர்/13 ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. ஆனால் மேற்படி ஆட்சேபனைக்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், 6 ம் பிரதிவாதிக்கு 2 ம் மனைவி மற்றும் 3 ம் மனைவி இருந்ததாகவோ, அதன் மூலம் வாரிசுகள் இருப்பதாகவோ காட்டுவதற்கு எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் இந்நீதிமன்றம் காண்கிறது.மேலும் 6 ம் பிரதிவாதியின் வாரிசுகள் சம்பந்தமாக இ.ம.எண்.204/2018 ல் இந்த 13 ம் பிரதிவாதி தரப்பில் எந்தவித ஆட்சேபனையும் செய்யாமலும், எதிருரை தாக்கல் செய்யாமலும் தவறியுள்ளதாக தெரிய வருகிறது. போதிய அவகாசம் கொடுத்த பிறகும், 13, 15 முதல் 22 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எந்தவித எதிருரையும் தாக்கல் செய்யாததால், மேற்படி இ.ம.எண்.204/2018 அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேற்படி இ.ம.எண்.204/2018 ல் முன் வைக்க வேண்டிய ஆட்சேபனையை இந்த மனுவான இ.ம.எண்.626/2018 ல் முன் வைத்துள்ளது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. இ.ம.எண்.204/2018 ன் தொடர்ச்சியாக இந்த திருத்தப்பாடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், 13,15,18 முதல் 22 எதிர்மனுதாரர்களின் ஆட்சேபனையானது அவசியமற்றது என இந்நீதிமன்றம் காண்கிறது. மேலும் 6 ம்

பிரதிவாதி அங்கமுத்துவின் வாரிசுகளான 23, 24 எதிர்மனுதாரர்கள் மேற்படி இ.ம.எண்.204/2018 மனுவில் எந்தவித ஆட்சேபனையும் தாக்கல் செய்ய முன் வராமல் தோன்றாதரப்பினராகிவிட்ட சூழ்நிலையில், மேற்படி 6ம் பிரதிவாதியின் வாரிசுகள் சம்பந்தமாக இந்த 13,15,18 முதல் 22 எதிர்மனுதாரர்கள் ஆட்சேபனை செய்வது அவசியமற்றது எனவும் இந்நீதிமன்றம் காண்கிறது. மேலும் பாகப்பிரிவினைக்கான வழக்கில் சம்பந்தப்பட்ட முறையான நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவேண்டியது மனுதாரர்/வாதியின் கடமை எனவும், தவறும் பட்சத்தில் மனுதாரர்/வாதிக்குதான் இழப்பு எனவும், அதனால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்பட போவதில்லை எனவும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. எனவே 13,15,18 முதல் 22 எதிர்மனுதாரர்களின் ஆட்சேபனையானது அடிப்படை ஆதாரமில்லாமல் உள்ளதால், இ.ம.எண்.204/2018ன் Consequential one மனுவான இந்த திருத்தப்பாடு மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

*இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.*

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்படடு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-ஜெ.செல்வன் ஜேசுராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

ஒப்பம்/-ஜெ.செல்வன் ஜேசுராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்